198



OFFICE OF THE REGIS
9-APR 192
MADRAS

உ

சிவமயம்.

திருத்தடாகம்

ஸ்ரீமத் திருமுடி சுவாமிகள்

# நெஞ்சுவிடு தூது.

கோவை, கு. நடேச கவுண்டர்
இயற்றியது.

கோயமுத்தூர் டைலர்
திருவாளர் அ. வெள்ளியங்கிரிக் கவுண்டர்
அவர்களால்
கோயமுத்தூர்
ல் அச்சுயந்திரசாலையில்
க்கபபட்டது.
1927.

O-,18MNK,T
N27
147344

சிவமயம்.

# முன்னுரை.

சிவநேயச் செல்வ நிறைந்த சிரியீர்!

"திருமுடி சுவாமிகள் நெஞ்சுவிடு தூது" என்னும் இச்சிறு நூலை அடியேன் யாக்கப் புகுந்தது சுவாமிகளின் திவ்ய சரிதத்தை ஒருவாறு வெளிப்படுத்தும் பொருட்டும் அடியேனதுள்ளத்துறுத்தும் சில குறைகள் நீங்கியடியேனுய்தி பெறற் பொருட்டுமே யாம். ஆதலால் இந்நூல் தூதிலக்கணத்திற் சிறிது சிதைந்திருப்பதாக ஒரு சமயம் தோன்றினும் ஆன்றோர் மன்னித்து ஏற்றுக்கொள்ளுவர். என நம்பி அவர்களை வேண்டுகின்றேன்.

செய்யுள் வடிவிற்றாகிய நூல் யாத்தற்குச் சிறிதும் தகுதியற்ற வடியேனும், "சொல்லுவேன் எனும் ஆசை என் சொல் வழி கேளா"மையால் யாத்த இச்சிறு நூலிற் காணப்படும் சொற்பொருட் குற்றங்களனைத்தையுங் களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

அடியேற்குச் சிறு பிராயத்திலே பன்னாள் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உதவி புரிந்து காத்தது போலவே, அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய நல்லோர் தொடர்பையும் உண்டு செய்தும் இதுகாலை இந்நூலை அச்சிலேற்றியும் உதவி செய்த எனது நல் அம்மான் திருவாளர் வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்களுக்கு அடியேன் எழுமையும் கடமைப்பட்டுள்ளேன்

இந்நூலை அன்போடு ஓதுவார்க்கு நல் இல்லற வாழ்வும் சற்குரவன்றிருவருளும் ஞானமும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

இங்ஙனம் அடிமை
கோவை கு. நடேசன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் திருமுடி சுவாமிகள்

# நெஞ்சுவிடு தூது.

தஞ்சகமக் காகுந் தடாகத் திருமுடிபால்
நெஞ்சுவிடு தூது நிகழ்த்துவேன்—அஞ்சலித்தே
ஆரணச்சி லம்பணிந்த வைங்கரத்து மும்மதத்து
வாரணத்தின் செந்தாண் மலர்.

## வழிபடு கடவுள் வணக்கம்.

கலி விருத்தம்.

வம்பொன்று மதவாதியார் வழியொன்றி யுழலாமலே
அம்பொன்செய்சடையீசனாருளொன்றுநெறிமேவவே
எம்பந்த வினையோடவே யினிதென்றனுளமாகுமே
சம்பந்த சரணாலயஞ் சம்பந்த சரணாலயம்.

# நூல்.

மணிகொண்ட வேலா வலய மருங்குற்
கணிகொண்ட மேகலையா வார்த்துப்—பணிகொண்ட

மாமணிசேர் சென்னி வளவரங்கி லாடுகின்ற
பூமகடன் மார்பிற் புரளொளிசேர்—தாமமோ

கோலப் புளகிதமார் கொங்கைமே லிட்டவெழில்
நீலப்பட் டாடையோ நேரென்னச்—சீலத்தாற்

பொய்யைமலை மேன்மைப் பொதிகைமுனி குண்டிகை
றுய்ய வுதித்துதக மொண்மலருங்—குய்யைமலை [நின்

சாந்து மகருந் தடவரைத்தேன் மான்மதமும்
காந்து மணிபலவுங் கையரிக்கொண்—டேந்தியிளா

முல்லையா னைந்துமுகந்தலைக்கை யாலாட்டி
யெல்லையிலா நற்றலஞ்சென் றேத்தியே—யல்லைக்

கருமுகிலை வென்ற களத்தா னருளாற்
பெருகியமு தூட்டிப் பெருக்கி—யுருகுமுளத்

தாயிற் சிறந்துலகைத் தான்புரந்து காத்தருளி
லாயிந் திரனு டதிசயிப்பத்—தாயித்

திருக்கா விரிபாய்ந்து சேனுடு நாணத்
திருக்கா விரிக்கரையிற் சீர்த்த—திருச்சோழ

நாட்டிற் பராபரனுர் நண்ணுந் தலங்கடமிற்
பாட்டிற் சிறந்த பரிசிற்றய்—வேட்டன்

றராப்பள்ளி காண வரியா னுறையுஞ்
சிராப்பள்ளி தன்னிற் செனகர்—குராப்பள்ளி

மட்டுவார் கூந்தலொடு மாதுருபூ தேசுரரை
யிட்டுமல ரேத்துதவத் தேவந்தான்—எட்டிவரு

கூற்றை யுதைத்த குரைகழலே போற்றிமுடை
நாற்ற வுடலினினி நண்ணுமே—யேற்றி

யிருண்முடிய ஞான மிலகச் சுமக்குந்
திருமுடிநற் பேராற் சிறந்தான்—அருளுருவச்

செவ்வந்தி மேனிச் சிவனை யுழுவலன்பாற்
செவ்வந்தி நற்கோயிற் சென்றன்பாற்—செவ்வந்திப்

போதுங் கமலமும் போதவிட்டுப் பூசித்து
மாதுங்கர் பாக்களால் வந்தித்தல்—ஓதுநன்

னேமமாக் கொண்டே நிகழ்ந்தான் குடிகெடுக்குங்
காமமுதல கடிந்தவிர்ந்தான்—நாமப்

பிறவிப் பெருங்கடலை நீந்தலெனும் பெட்பே
யுறவிக் குவலயத்தே யுண்மைத்—துறவித்தோற்

றோணியாஞ் சற்குரவன் றோன்றுவதெக் காலமவற்
காணியவெந் நாளிலந்தோ கைவருமென்—றாணி

பசுமரத்த ரைந்த படியன்பாய் வாழ்நாள்
வசவனைய ளித்தவல்ல மன்போல்—அசைவறநே

சித்தவன்முன் றோன்றினன் றிம்மப்ப வீரசைவன்
சித்தவன்ம லத்திரளைச் சேதிக்குஞ்—சித்தன்கண்

டாதுலனற் சங்கநிதி யண்மையிற்கண் டாலென்ன
மாதுயர நீங்கியடி வந்தித்துப்—பாதி

யுமையா ளகமறைத்தே ருருக் கொண்டே
யெமையாள வந்த விறைவா—அமையா

தலைக்கும் பிறப்பகற்றி யாட்கொளெனப் போற்ற
நிலைத்தவருட் டிம்மப்ப னோர்வான்—அலைக்கங்கை

தங்குதிருச் சென்னியான் றங்கி விளங்கு திருக்
கொங்கினுயர் தென்கயிலைக் குன்றென்றுண்—டங்கு
[நாம்
செல்வேஞ்சின் நாளிலங்குச் சேர்வாயே யின்பாசங
சொல்வேமென் றோதக் குளிர்ந்துள்ளங்—கொல்லே

றுடையானுக் கன்ப னுகந்திருந்தா சான்சொல்
லடைவேசென் றங்காசாற் காணு—துடையா

யொளித்தாயோ வென்றேங்கி யோராற்றுற்றேறி
குளிர்ச்சோலைக் கோவைக் குறுகி—வளத்தி

னுடனிருந்தான் கல்விபலர்க் கோதுவித்தான் பாவங்
கெடவிருந்தா னிங்ஙன் கிளர்நாள் —அடைவாக

மெய்யாத் துரைபுலமை வேதியன்மெய்ஞ் ஞானமிகும்
அய்யாத் துரைக்கன்ப னுயினன்—ஐயன்றிம்

மப்பன் குருடிமலை யண்ணியுள னென்றன்னோன்
செப்பத் தெரிந்தங்குச் சென்றடைந்தான்—ஒப்பில்லா

ஆசாற்கண் டன்பா யடிபணிந்தா னுசானும்
பாசா டவிதொலைக்கும் பண்புரைத்தே—நேச

மனைவியொடு மேலாமில் வாழ்க்கை நடாத்தி
வினையறநில் லென்று விளம்ப—வனையதே

பாக்கியமென் றேத்திப் பணிந்துவிடை பெற்றதுபோல்
வாழ்க்கைபுரிந் தானல் மனையுடனே—யார்க்குஞ்

சுதைக்கடல் வெண் டிங்கடனைத் தோற்றுவித்தாலென்
[னச்
தனைத்தபுகழ்ச் சண்முகனைத் தந்தான்—இதத்தினன்

மிக்க மனையுமவை மெச்சுந் திருமகனுந்
தக்க புகழுந் தனக்கிருந்து—மொக்கத்

திருநீற்றி னுட்கிடந்துஞ் சேராக் கழல்போற்
கருதா தரனடிக்கே காதல்—பெருகி

யிருந்தான னவரு ரெரித்தார்க்கன் பார்சூழ்ந்
திருந்தா னவத்தை யிரித்தான்—வருந்தாது

மாயப் பிறவி யறுக்க வகைதந்தான்
றாயமா ணுக்கர்பலர்த் தொண்டுகொண்டான்—நேயத் [தாற்
செம்மையம்பொ னாக்கிச் சிவனடியார்க் கீந்துவந்தா
னம்பனரு ணீற்று னலிதீர்த்தான்—இம்பாரர்

வேண்டினவெல் லாந்தந்து வீற்றிருந்தான் சாபாலங்
கீண்டுநட மாடுகழல் கிட்டினான்—யாண்டும்

வருமிணைவு தீர்ப்பான் வளமார் தடாகத்
தருளுவங் கொண்டங் கமர்ந்தான்—ஒருமுனிவன்

அன்னவன்றன் சேய்சண்மு கானந்த னெந்தமக்குத்
தன்னடிக்குத் தொண்டாந் தகைதந்தான்—மன்னுங்

குரவ ரிருவர் குருபூசை யாங்கள்
வருடந் தொறும்புரிவம் வந்துன்—னிருவிழியாற்

காணவெனச் சொன்னான்வேற் கந்தனடிக் கேவைத்த
ஆணவுரு நாரா யணகவுடன்—காணவெனச்

சென்றேன் றடாகந் திருமடத்தைச் சேர்ந்தவருட்
குன்றே யனையான்றன் கோவிறனில்—வென்ற

புலனுடையா ரஞ்ஞானம் போக்கினர் ஞான
நலனுடைய நல்ல முனிவர்—கலவையுடன்

மாசாய்க் கழிந்திடுநம் மாதேவன்பூதியுயிர்
மாசா வனநீக்கு மாண்பாலும்—தேசிகத்தா

லாய பலவணிக ளங்கச் சுமையாகுந்
தூய விழிமணியைத் தொட்டாலும்—மாயவற்கு

மேலாம் பதந்தருநல் மேன்மையினாலுந் நீறு
மாலால முண்டோன்ற னக்கமு—மேலப்

புனைந்தார்கல் லாடையரைப் பொற்ப வினைசத்தார்
மனந்தான் சிவனடிக்கே வைத்தார்—சினந்தால்

வனத்துழாய் மால்வளமும் வற்றுவிக்க வல்லார்
நினைத்தா லெனைத்துஞ்செய் நீரார்—அனைத்துஞ்

சிவமாகக் காணுஞ் சிறப்பினர் என்றுந்
தவமே கடனாக் கொள் சால்பார்—பவநெறியிற்

செல்லா திருப்பர் சிவன்புகழல் லாதொன்றுஞ்
சொல்லா திருப்பர்மிகத் தூய்மையார்—வெல்ல

வரியபுல் லைனந்து மவித்தார் குணமாம்
பெரியமலை மேனின்ற பெற்றியார்—[பெரிய]

சடைமுடி சூடிய தவராச ராவார்
புடையிருந் தன்போடு போற்றி—மிடையுங்

கரிசிரா வண்ணங் கடிகுருடி வெற்புந்
திரிசிரா வண்ணச் சிலம்பும்—துரிசிரா

தேகாஞ் சினதிக் கெனவறியா தோடச்செய்
மாகாஞ்சி காவேரி மாநதியும்—பகார் சொற்

பங்குடையா ளோடும் பாரு டரசவைசேர்
கொங்குஞ்சோ ணாடுங் குலவிவளம்—பொங்கும்

தடாகமுஞ்செவ் வந்தித் தலமுமறை யோர்நா
விடாது பயில்வேத மாவு—மடாத

பவஞான மாக்குதொழிற் பஞ்சமலர் சாடும்
சிவஞான வேழமுந் தேனு—முவமிக்க

லாகாத வொண்சுவையோ டானந்தம் பொங்கவளர்
மாகாத லார்மொழிபா மாலையும்—போகாத

புன்பிறவி போக்கிப் புறந்தருள்வ னென்றருளாற்
சந்நிதியி னாட்டுஞ் சயக்கொடியு—மன்னி

முழங்குநவ நாத முரசுநல் லின்பம்
வழங்குதிரு வாணையும் வாழ்த்தித்—தழைந்தடிய

ருள்ளத்தி லூறுகின்ற வொள்ளமுதே யெஞ்ஞான்றுங்
கள்ளத்தார் காணாத காட்சியே—வெள்ள

மிருக்குஞ் சடையைமறைத் தென்பாரநீத்து
வரித்தோ லுடைநீத்து மற்றுந்—தரித்தென்று

முள்ளபல கோல மொளித்தோர் அருளுருவாய்க்
கள்ள மறுக்கவந்த கண்ணுதலே—வுள்ளக்

கறையை யகற்றவந்த கருணைப் பெருக்கே
மறைமுதலே தூய்மை மதியை—மறைவலஞ்

ஞான விருளகற்று ஞான மார்க் தாண்டனே
தானங் கனிகற்ப தாருவே—வூன

மகற்ற முளைத்த வருமருந்தே சற்சிற்
சுகப்பா றருங்காம தேனே—யகத்தில்

விழைவார் விழைந்தவெலாம் வேட்கையற வீயு
மழிவெயிலார் சிந்தா மணியே—தழையும்

விலங்கு நகர் புல்லு மெய்யன்பா விட்டோர்க்
கிலங்கும் பரமபத மீவாய்—பொலம்பூந்

திருவடியெஞ் சென்னிமிசைச் சூட்டி யருளுந்
திருமுடியென் றேத்திச்சிரமேற்—கரமலர்கள்

சூடினர் நிற்பச் செரிந்து, தொழவேண்டி
நாடினே ஞானமந் நாயகர்தம்—பீடுகெழும்

வெண்காப்புப் பூசி விளங்குந் திருநுதலும்
விண்காப்பான் விற்போன்ம் புருவமும்— தண்பூஞ்செங்

தாமரையே போலுந் தயையொழுகு கண்ணிணையுந்
தாமரையைத் தாங்குகையான் றன்புகழ்சேர்—காமரு
[நீள்

காதும் பிறவிக் கடற்றோ ணியாமொழியை
யோதுந் திருவாயு மொண்களமு—நாதன்செங்

கண்மணியுந் திக்குக் கவர்ந்தவுயர் தோளிணையுங்
கண்மணியுங் காப்புங் கலவையுங்—கண்மலரும்

பொற்ப விலங்கும் பொழின் மார்பும் போற்றுநர்க்குக்
கற்ப தருவாங் கரமலரும்—விற்பருதி

மாற்ற வியலா மனத்திருளை மாற்றியொளி
யேற்றும் பதத்தா மரையிணையு—நோற்ற

தவப்பயனாற் கண்டேனைத் தானு மடியேன்
பவப்பிணிகள் போமாறு பார்த்தா—னுவப்பாக

வன்னவன்ற நோக்கா லடைந்தபே ரின்பத்தை
என்னுரையாற் சொல்ல வியலுமோ—பொன்மனமே

மற்றுமவ் வின்ப மருவும் விழைவினேன்
சற்றுநா ணுதிச்சை சாற்றுகேன்—மற்றவர்பாற்

சொன்னாற் செவிகொடார் துன்பந் துடைப்பவர்பா
லென்னானுஞ் சொல்வ தியலுமென—முன்னோர்

உரைத்துள்ளா ராக வுறுதுணையா முன்னை
யிரக்கின்றேன் செய்தியெனு மெண்ணந்—தரப்ப

வெனக்கினிய நண்பாகு நீயிசையாயென்னிற்
பினைத்துணையார் செய்வர் பெரியோர்—நினைத்தவெலா

நின்னிசைவாலன்றே நெடுநீர்ப் புவிமீதின்
மன்னும் புகழான் மருவினரால்—நின்முன்னர்

நின்னைப்புகழ் ந்துரைத்தனேரல்ல நம்மிருவர்
முன்னந் தனையாமே முன்னறிவோ—மன்னத்தைத்

தூதுசொலி யுய்ப்பேனேற் றாங்குஞ் சிறுநடைக்கே
பேர்துமிக வீணுகப் போக்காதோ—போதுணராக்

கிள்ளை தனையுய்த் தாற்கிளத்தும் பொருடெரியாப்
பிள்ளை தியாற்பல் பிதற்றுதோ—வெள்ளைநிற

நாரையையுய் ப்பாமென்று ணயகர்க்கும் புன்புலவுச்
சூரையுணும் தட்டருக்குந் தூரமன்றோ—நீரைச்

சொரியுங் கருமேகஞ் சொல்லமுத மேகந்
தருகுநா ணுதுசெல லாமோ—தெரியுங்கால்

நெஞ்சே நின் றூதுக்கு நேரில்லை யென்வேட்கை
யெஞ்சா தவன்முனெடுத்துரைக்க—விஞ்சும்பே

ராற்ற லுனக்குளதா லாகையா லின்னேநீ
போற்றத் தகும்பெரியோன் பொன்னகரா—மேற்றமிகு

மாவிப் பதிசென்றெ ஞவிப்பதிபக்கன்
மேவிப் புதியநறு மென்மலர்கள்—தூவியவன்

பாத கமலம் பணிந்து பரவுமவர்
பாத கமலத்தைப் பாற்றுபெருஞ்—சோதியே

தாமரைக்கண் ணனுக்குஞ் சந்தச் சதுர்மறைச்செக
தாமரைக்கண் ணனுக்குஞ் சார்வரிய—தாமரைமீயார்

அத்தத் தணிந்தேயணிபூம் பசுங்கொம்போ
ரத்தத் தணிந்தருளு மத்தனன்—றித்தித்

தருநிழற்கீழ் நால்வர்க்குத் தந்தமருந்தைத்
தருநிழல்சேர் கற்ப தருவே—பெருகுமருட்

சாகரமே சாந்தகு ணக்குன்றேச தானந்தப்
போகநில மேஞானப் பொக்கிஷமே—யேகனே

உன்றன் பெருமையுரைக்குமளவேயோ
வென்றே மிகவேத்தி யென்றுறையை—நன்றாகச்

செவ்வி யறிந்தேநீ செப்புவாய் திப்பியனே
யெவ்வம் பொறுக்க வியலாம—லிவ்வுலகில்

நின்னடிமைத் தொண்டிற்கு நேயம்வைத் தாளொருவ
னென்னைநின் பாற்றா திசைவித்தா—னன்னவன்றன்

செய்திசிறிதே செவிசாய்த்துக் கேட்டருளி
யுய்தி யுதவுவது முன்கடன்காண்—துய்ய

விடையான் றிருநெறியே மேவும் விழைவா
னடையும் வகைமற் றறியா—னிடையிடையே

பொல்லாப் புலவேடர் பொய்ந்நெறியே சென்றுபொறி
யெல்லா மிழுக்கு மியல்பினு—னல்லோர்

நடுவே பொலியு நசையான் மிகவுங்
கடையோ ருடனுங் கலந்தான்—கொடிய

கொலையுங் களியுங் குடியிருந்த துட்ட
வலகை யனையார்க்கு மாகாக்—கலகந்

தொடுத் திரிவோர்க்குஞ் சோற்றுப் பொருட்டா
லடுத்துப் பணிசெய் தயர்ந்தான்—வடுத்தமலர்

மாணுர் குழற்காட்டின்மையார் விழிவலையி
னேனுமை யாற்சிக்கி நோன்மை கெழு—நானஞ்சேர்

கொங்கைக் கயக்கோட்டாற் குத்துண் டகலல்குல்
வெங்கட் செவியான் மிகக்கடியுண்—டங்க
மிகமெலிந்து நொந்தாம்பன் மெல்லிதழ்க்களுண்டு
தகவிழந்து காமச் சலதி—யகம்விழுந்தே
மூழ்கினுன் றத்தளிக்கும் வேலை யுறுதுணையாச்
சூழ்தல்செய் தானுன் றுணையடியே—வாழ்கநின
தாரருளை யாவந்தே யன்பாற் கரைசேர்த்துத்
தாரகத்தைத் தந்தே சளந்தீர்த்துப்—பூரணமெய்ஞ்
ஞானத்தார் தம்முடைய நாப்ப ணிருத்தியவ
னூனத்தார் தம்மோ டுழலாதே—ஈனப்
புலன்வழியி னல்லறிவைப் போக்காதே ஞான
நலனடையப் போதநவின்றே—யலகில்பே
ரின்பவீ டெய்தவிசைந்தே குருவாய்வந்
தன்பினேடாட்கொ ளருளுனேக்கா—லென்றென்பே
ராவ லுரைத்தன்னேனன்பார் விடைபெற்றே
யோவா வருளாலவ் வுத்தமன்றன்—கோவாரக்
கோலமிகு பூசைதனிற் கொண்டருளு முண்டசப்பூ
மாலையுநீ றும் வாங்கிவா.

## வெண்பா.

அம்புவிமேல் வந்தெய்மை யாண்ட திருமுடித்
தம்பிரான் செங்கமலத் தார்வாங்கிப்—பம்புபல
வஞ்சேமே வும்புலன்செய் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வராய்நினைந்து.

முற்றிற்று.

திருமுடி சுவாமிகள் திருவடி வாழ்க

உ

சிவமயம்.

# திருமுடி சுவாமிகள் தோத்திரப் பதிகம்.

## காப்பு.

### குறள் வெண்பா.

அரசுநிழல் கொண்டுவள ரத்தியடி சேர்ந்தே
பரசுநற்கொள் வார்நற் பலம்.

## நூல்.

### பன்னிரு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

செஞ்சொற் புலவர் செப்புதற்கு மரிய நின்சீர் பரவுவான்
சிறியேன் றுணிந்த செயனேகிற் சிவனார் தரித்த செம்ம
[ணிசேர்
பைஞ்சூட் டரவம் பைம்பொன்மலை வளைத்த பாழிச் செயனேக்
பங்க நுழையும் பூநாகந் தானுமுயன்ற பரிசன்றே [இப்
திங்க டவழு மணமலரார் செறிந்த சோலை புடையுடுத்த
திகிரி கரியீ ருரிபோர்த்த திண்டோ ளீசர் நீகாண
எங்கு நிறைந்து நின்றதென நிற்ப வெயிலா வவையுடுத்த
வெழிலார் தடாசத்திருமுடியே யெம்மையாண்டகுருமணியே

செம்பை யம்பொ னுக்கவலை சித்த நீயென் றுலகினுளைச்
செப்பு வதுமெய் யெனவறிந்தேன் சிறிது மிளகாச்சிலையான
வம்பன் பனத்தைப் பொன்னுக மாற்றி னுயுன் னருட்குறியை
வந்து கண்ட மாத்திரத்தே மற்றச் செயலு மரிதாமோ

இம்பர்ப் பணிவார்க் கிணையில்லா வின்ப ஞான மீந்தேயென்
றென்று மழியா வீடளிக்கு மேந்தல் தடாகத் தெந்தாயே
தும்பை கொன்றைச் சடைமுடியார் துணைத்தாள்சார்ந்து துக
[ளறுத்த
தூய்ய மனத்துத் திருமுடியே துறவோர் தமக்கு ளரியேறே.

உடுக்க ளலர்ந்த விரவன்ன வோதி யார்த மொண்ணகைக்கு
மொலிக்குங் கடற்கு முயர்துணத்துக் குறிய முனிவன் மலை
[ப்பிறந்து
வடக்கு நோக்கி வருந்தென்றல் வளிக்கு மெரிக்கு மதித்தழற்கும்
வாடி யுடல மதிமயங்கி வாளுள் வீணுக் கியபின்றைக்
கடுக்கைச் சடிலக கண்ணுதலார் கழற்கான் மறந்து கதியின்றிக்
கால படர்கள் காலுதையால் கலங்கிக் கலுழா தடியேற்குத்
தொடுக்கு மன்பு நெறிதந்து துணைத்தா ளிணையென் முடிசூட்
[டாய்
தூய்ய மனத்துத் திருமுடியே துறவோர் தமக்கு ளரியேறே

துன்ப மடைந்த சமயத்தே துறவி லாசை மிகக்கொண்டே
சொற்ப வின்பர் தலைவரினுஞ் செம்மாந் துலக வாழ்வுகந்தே
யின்ப மழியா தெய்துவ தற் கியன்ற வளவி னறம்புரிக
வென்றே பெரியா ருரைக்குங்கா லிசைந்தே யுடனே மறந்து
வன்பு மனத்தா லலைப்புண்டு வாளுள் வீணுக்காதன்றன் [விடும்
மலர்ச்சே வடியென் முடிசூட்டி மதியுஞ் சாலுன் கடனன்றோ

பொன்பத் திரஞ்சே ரிறும்புளதாற் பொருந்தி வாழுந் தடாகம்
[வளர்
புண்ய வடிவத் திருமுடியே பொறையோர் தமக்கு ளரியேறே

அறத்தா றறியா வறிவிலிகட் கடிமை பூண்டே யவர்புகலு
மாகாச் செயல்க ளதர்மமென வறிந்தும் புரிந்து மடங்காமே
யுறத்தான் மானஞ் சிறிதுமின்றி யுதவார் மாட்டு மிரந்துநாண்
ஒழியப் பொருளீட் டியுநிரம்பா வயறுவளர்த்தலொழித்தேநற்
றிறத்தாற் பழியி னீங்குபொரு டேடி யைவேள் வியுஞ்செய்து
செம்மை நெறியிற் சேர்ந்துய்யச் சிறிதுன் கடைக்கண் டிற
[வாயோ
தொறுக்கா வலர்வே யிசைகேட்டே யளியாற் பைம்பொன்
[கொன்றைசொரி
சோலைத் தடாகத் திருமுடியே துறவோர் தமக்கு ளரியேறே

விண்ணோ ருலகின் முருகுயிர்க்கு மலர்க்கற் பசத்தினறுநீழன்
மேவிக் கடல்வா யமுதருந்தி மென்பூங் கூந்த லரமகளிர்
பண்ணு மிசைத்தேன் செவிமடுத்தும் பவள விதழின றவுண்டும்
பரிதிக் கதிர்கான் மானமிசை யூர்ந்து திரியும் பவுரிஷரும்
மண்மேற் பெரியோ ருளங்கைக்க மடிந்து புண்ய முடிவினிலே
மறித்தும் பிறக்கு மியல்பானுன் மனத்தா னினைக்கு மாண்
[பினதோ
எண்ணார்பு ரங்க ணகைத்தெரித்த விறைவ னடியே பொருளாக்
[கொ
ளெழிலார் தடாகத்தி ருமுடியே எம்மை யாண்ட குருமணியே

147344

விருதோ டியங்கண் மிகமுழங்க வெள்ளைக் கவரி புடைதுளங்க
வெயில்கால் செம்பொற் சிவிகைமிசை மேவிப் புவியாள் [வேந்தர்களும்
பெரிதே மதிக்கத் திரிகின்ற பெரிய கவியாள் வேந்தர்களும்
பிறப்பை யறுக்க வறிவாரோ பிஞ்ச கன்ற னருள்வடிவக்
குருதே சிகன்ற னருளின்றி வீடு படிப்பாற் கொளநினைத்தல்
கொன்னே கடலைக் கைநீந்திக் கடக்க முயன்றேன் செயல [ன்றோ
விருதாக காலம் கடவாதே விரைவிற் குருவா யெனையாள்வாய்
மேன்மைத் தடாகத் திருமுடியே மெய்யர் தமக்கு ளரியேறே

ஊனன் வுடலை யறுசுவைசா லுண்டி யருத்தி வளர்த்துநெருப்
பேரி கழுகு நாய்பேய்க ளுள்ள மகிழ வுதவுகின்ற
யீனர் செல்வச் செருக்கார்ம றிரப்போர்க் கொன்று மீயாதார்
ஈச னடியார் குற்றேவ லியற்று ருலகி லேன்பிறந்தார்
கான வேயின் றுளைவழியே காற்றுப் புகுத விசைபெருகக்
களகண் டம்பாட் டோதமயில் கலாபம் விரித்தே நடமாடும்
வான மளவு சோலைவளர் வாவிப் பதிவாழ் திருமுடியே
பலநோய் தீர்க்கு மருந்தினே மனத்தாற் றுறந்த மாதவனே

திங்க ளொடுநஞ் சுமிழ்பகுவாய்ச் செங்க ணரவுஞ் சேர்ந்தமுடிச்
சிவனார் நீற்று நெறிபரவுஞ் செம்மை மனத்துப் பெருந்தகை யாய்

---

பொங்கு மளியென் மேலுமக்குப் பொருந்து வதுமெய் யாமாகிற்
புன்மை நெறிசேர் மாக்களொடு மொருந்தி யுழலா தானடிக்
[கே
கங்குாடந்த வெள்ளமெனக் கண்ணீா பெருகத் துதிக்கின்ற
கைசே ரடியார் கணத்தோடே கலந்து மகிழக் கருணைசெய்
[வாய்
துங்க மலரார் குளிர்சோலை சுற்று மூடுத்த தடாகம்வளர்
துய்ய மனத்துத் திருமுடியே துறவோர் தமக்கு ளரியேறே

நிலவு பொழியு நீறணிந்த நெற்றி போற்றி நிலவுலகி
னின்ற வுயிர்கட் கிரங்கியரு ணிறைந்த விழிகள் போற்றி
[யரன்
குலவு பெருமைக் குணங்கேட்கக் குளிருஞ் செவிகள் போற்றி
[மனக
குறைக ணீங்க நலம்பகருங் கோதில் சிகுவை போற்றிமலர்
பலவு மீட்டிப் புரமெரித்த பாம னடியிற் றூவுகின்ற
பழுதில் காங்கள் போற்றியக்க வடந்தாழ் மணிமார் பகம்
[போற்றி
சுலவு பிறவிக் கடன்மூழ்கித் துன்பத் தலையா தெமையாண்ட
துய்ய மனத்துத் திருமுடிநின் றுணைத்தாள் போற்றி போற்
[றியவே

---

திருமுடித் தம்பிரான் றிருவடி வாழ்க.

---